[1990 ஏப்ரல் 21

காலநடை மருத்துவக் கல்லூரி.

* 7215 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகர் நகரியத்தில் உள்ள காட்டுப் பாக்கம் விவசாயப் பண்ணையில் கால்நடை மருத்துவ கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 4044 திரு. இரெ. இராசமாணிக்கம் :
டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றை அரசே ஏற்று நடத்தி அதன் உறுப்பினர் களை வாழவைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 189 நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை அரசு ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை

1990 ஏப்ரல் 21]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 189 நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளை அரசு ஏற்று நடத்தக்கூடிய ஆய்வு இல்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு நெசவாளர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களை அரசு ஏற்றுக்கொள்ள மீண்டும் ஆவன செய்யுமா என நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்ககளை அரசு ஏற்று நடத்துவது என்பது கூட்டுறவுக் கொள்கைக்கு முரண்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களை சேர்த்து அவர்கள் தேர்ந்தெடுக்கும் நிர்வாகக் குழுவின் அமைப்பின் கீழ் அந்த நெசவாளர் சங்கங்கள் இயங்க வேண்டும். அரசு ஏற்றுக்கொள்ளுவது என்றால் அது கூட்டுறவு கொள்கைக்கு முரண்பாடாக அமையும். இருப்பினும் நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு பங்குத் தொகை மற்றும் பங்கு மூலதனத் தொகை தள்ளுபடி மானியம் முதலிய உதவிகளைச் செய்ய அரசு முன் வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சங்கங்களைத் திறப்பதைக் காட்டிலும், நலிந்த சங்கங்களில் இப்போது புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்கின்ற அந்தப் பணி முன்பு நடைபெற்றது. தற்போது அந்தச் சங்கம் இல்லை. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் கூட்டுறவு அமைப்புகளில் நெசவாளர்களைக் கொண்டு வருவதுதான் இந்த அரசினுடைய கொள்கை. புதிதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதை இந்த அரசு வரவேற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]